பக்கங்கள்: 11 விலை : 20/-

# காலைக்கதிர்
Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | பங்குனி 17 திங்கட்கிழமை 30.03.2020 | கதிர் 13

## பிரதேசசபை உறுப்பினர் கைது!

கொழும்பு, மார்ச் 30

ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும்போது கடற்படை வீரர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் ஆராச்சிக்கட்டு பிரதேச சபை உறுப்பினர்

9

## பேக்கரி உற்பத்திகள் மூலம் கொரோனா கிருமி பரவுமா?

கொழும்பு, மார்ச் 30

பாண் அல்லது பேக்கரி உற்பத்திப் பொருள்கள் மூலம் கொரோனா வைரஸ் பரலக்கூடும் என்று சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் தகவலில் உண்மை இல்லை என்று வைத்தியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது குறித்து ஐ.டி.எச். தொற்றுநோய் வைத்தியசாலையின் உடற்கூறியல் நிபுணர் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம கூறுகையில், கொரோனா வைரஸ் உணவு மூலம் பரவுவதில்லை.

9

## உள்ளே...



கொரோனோவும் கொலைகாரர்களும் 06



வடக்கு,கிழக்கு ஆளுநர்களே! 07

## ரூபாவின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சி

அமெரிக்க டொலருக்கான நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் இன்றைய விற்பனை பெறுமதி 192.50 ரூபாவாக பவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## ஊரடங்கு தொடர்வதால் மிகமோசமான பாதிப்பு

### தமிழ் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.மாவட்டத்தில் தொடர்ந்து 10 நாள்களாக ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளதால் நாளாந்த வருமானத்தை நம்பியுள்ள குடும்பங்கள் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டுள்ள என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

9

## கிளிநொச்சியில் விசேட பாஸ் நடைமுறை!

கிளிநொச்சி, மார்ச் 30

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள போது வியாபாரம் மற்றும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற வர்த்தகர்கள் மற்றும் விவசாயிகளுக்கு விசேட பாஸ் அனுமதி நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இன்று காலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

9

## போதிய உதவி இல்லாது பல குடும்பங்கள் பட்டினி!

### யாழ்ப்பாண நிலைமை இதுதான்

யாழ்ப்பாணம், மார்ச் 30

**கொரோனா தாக்கத்தினால் நாடு முற்றாக முடக்கப்பட்டுள்ள நிலையில் யாழ். மாவட்டம் கடந்த 10 நாள்களாக முற்றாகச் செயலிழந்த நிலையில் இருக்கின்றது. இதனால் யாழ்ப்பாணத்தில் உள்ள பல அன்றாடம் காய்ச்சி குடும்பங்கள் பட்டினியால் வாடுகின்றன.**

**தினமும் தொழிலுக்குச் சென்று உழைத்து உண்ணும் குடும்பங்களின் நிலைமை படு பரிதாபமாக உள்ளது. அரசினால் உதவித் திட்டங்கள் வழங்கப்படுவதாக அளவுக்கதிகமான பிரசாரங்கள், ஊடக அறிவிப்புகள் விடுக்கப்படுகின்ற போதிலும் அந்த உதவிகள் அல்லல்படும் மக்களைச் சென்றடையவில்லை எனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.**

9

## 122 பேருக்கு கொரோனா

கொழும்பு, மார்ச் 30

கொரோனா கிருமி தொற்றால் மேலும் இருவர் இன்று திங்கட்கிழமை பிற்பகல் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

9

## 19 மாவட்டங்களில் ஊரடங்கு தளர்வு!

கொழும்பு, மார்ச் 30

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, புத்தளம், யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இன்று காலை 6 மணி முதல் தளர்த்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் மீண்டும் பிற்பகல் 2 மணிக்கு நடைமுறைக்கு வந்தது.

9

## மலேசிய மசூதி மத நிகழ்வுக்குச் சென்ற 6 குழுவினரும் பொலிஸில் பதிய வேண்டும்

மலேசியாவில் கொரோனாத் தொற்றுப் பெருமளவில் ஏற்படக் காரணமான மலேசிய ஸ்ரீபெட்டலிங் மசூதியில் நடந்த வழிபாட்டில் கலந்து கொண்ட இலங்கையைச் சேர்ந்த ஆறு அணிகளின் அங்கத்தவர்களையும் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு தமது நிலைவரத்தைப் பதியுமாறு அரசு கேட்டுள்ளது.

பதில் பாதுகாப்புத் தலைமை அதிகாரியும், இராணுவத் தளபதியும், கொரோனாத் தொற்றுப் பரவலைக்

9

## நால்வர் குணமடைவு

கொழும்பு, மார்ச் 30

கொரோனா கிருமித் தொற்றுக்குள்ளாகிச் சிகிச்சை பெற்று வந்தவர்களில் மேலும் நால்வர் இன்று குணமடைந்து வெளியேறியுள்ளனர்.

9

## உயர்தரப் பரீட்சை ஒத்திவைக்கப்படாது

கொழும்பு, மார்ச் 30

2020 ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியாகும் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

9

## கொரோனா சந்தேகத்தில் மூவர் வைத்தியசாலையில்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 30

கொரோனா கிருமித் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் மூவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இராணுவச் சிப்பாய் ஒருவரும், வைத்தியசாலையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் காவலாளி ஒருவரும், யாழ். பொலிஸ் நிலைய போதை தடுப்புப்

9

## தேர்தல் வேண்டாம்!

### கோருகிறார் அத்துரலிய ரத்ன தேரர்



நாட்டில் ஒரு வருடத்துக்கு தேர்தல் அவசியம் இல்லை எனத் தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர்,

9

## சாதாரண தர பரீட்சை முடிவு இந்த மாத இறுதிக்குள்

கொழும்பு,மார்ச் 30

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை, பெறுபேறுகளை ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடுவதற்கு பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

9



# யாழ். பிரதேச செயலகத்தில் கிருமி நீக்கும் செயற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றாளர் அடையாளம் காணப்பட்டதை தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் கிருமி நீக்க நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.

கொழும்பிலிருந்து வந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து கிருமி நீக்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள விசேட அதிரடிப்படையினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.



# சமய ஒன்றுகூடல்களை கட்டாயமாக தவிருங்கள்

## இந்துமா மன்றம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 30

கொரோனா கிருமித் தொற்று தொடர்பான அச்சம் எழுந்துள்ள நிலையில், ஊரடங்கு உத்தரவினை மதித்து, சமய ஒன்றுகூடல்கள், விழாக்கள், கூட்டுப்பிரார்த்தனைகள், உற்சவங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு அகில இலங்கை இந்துமா மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

'கொரோனா நோய் பரவாது தடுப்பதற்கென அரசினால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அவை யாவுமே நம் ஒவ்வொருவரையும் இத் தொற்றிலிருந்து காக்க என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

கடந்த சில வாரங்களாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்கும் ஊரடங்கு உத்தரவினை மதித்து, சமய ஒன்றுகூடல்கள், விழாக்கள், கூட்டுப் பிரார்த்தனைகள், உற்சவங்கள் என்பவற்றினை நிறுத்தி நம்மையும் காத்து நம்மைச்;சூழ உள்ளவர்களைக் காப்பாற்றவேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையும் மனிதாபிமானமும் ஆகும்.

எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணி இரங்கினன். என்ற வாக்கிற்கமைய தேவையுடைய வறியோர்க்கு இரக்கத்துடன் உதவியும் தற்காத்தும் வாழ்வதே இன்றைய தேவைப்பாடாகும் என்பதை உணர்ந்து நடக்க அன்புடன் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

கூடிய விரைவில் இவ் இன்னல் நிலை மாறி உலகத்து உயிர்கள் யாவும் நலமுடன் வாழ எல்லாம் வல்ல பரம்பொருளின் பாதாக்கமலங்களைப் பணிந்து பிரார்த்திக்கின்றோம் என இந்துமா மன்றத்தினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# உயிர்த்த ஞாயிறு ஆராதனை ரத்து

கொழும்பு, மார்ச் 30

பெரியவெள்ளி மற்றும் உயிர்த்த ஞாயிறு ஆராதனைகள் அனைத்தும் இரத்துச் செய்யப்படுவதாக பேராயர்மல்கம்ரஞ்சித்ஆண்டகை அறிவித்துள்ளார்.

விசேட அறிக்கை ஒன்றின் ஊடாகவே இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் –

கொரோனா வைரஸின் அச்சுறுத்தல் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலைமையில் அதிகளவானவர்கள் ஓரிடத்தில் ஒன்றுகூடுவது பொருத்தமற்றதொரு செயற்பாடாகும்.

இதனடிப்படையிலேயே பெரிய வெள்ளி மற்றும் உயிர்த்த ஞாயிறு ஆராதனைகள் அனைத்தினையும் இரத்துச் செய்யும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பரிசுத்த வாரமாகக் கடைப்பிடிக்கப்படும் இந்த வாரத்தில் திங்கள், வியாழன், பெரிய வெள்ளி, சனி மற்றும் உயிர்த்த ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறவுள்ள விசேட ஆராதனைகள் அனைத்தும் தொலைக் காட்சி வழியாக நேரடியாக ஒளிபரப்பப்படவுள்ளது.

இந்த ஆராதனைகளின் போது அனைத்து கத்தோலிக்கர்களும் வீடுகளில் இருந்தே தமது சமயக் கடமைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் – எனக் கேட்டுள்ளார்.(ஐ)

# சமூக இடைவெளி முக்கியம்!

கொழும்பு, மார்ச் 30

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் தருணங்களில் அனைவரும் சமூக இடை வெளியைப் பின்பற்ற வேண்டியது அவசியம் என கொரோனா வைரஸ் கட்டுப் பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் இராணுவத் தளபதி லெப் டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா வலியுறுத்தியுள்ளார்.



ஊரடங்கு தளர்த்தப்பட்ட பிரதேசங்களில் பொதுமக்கள் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான உலக சுகாதார நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள ஒரு மீற்றருக்கும் அதிகமாக இடைவெளியை ஒருவரிடத்திலிருந்து பிறிதொ ருவர் பேணுவது அவசியமாகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் எமக்கு வெளிப்படையாகத் தெரி யாது விட்டாலும் சமூகத்தில் பாதிக்கப்பட்ட நபர்கள் அடை யாளப் படுத்தப்படாதிருப்ப தானது குறிப்பிடத்தக்க அச் சுறுத்தலை ஏற்படுத்துவ தாகவே உள்ளதாகவும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா குறிப்பிட்டார்.

# மக்கள் வாழ்க்கையை அசௌகரியமாக்கும் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படக்கூடாது



## ஜனாதிபதி கோட்டாபய பணிப்பு

கொழும்பு, மார்ச் 30

மக்கள் வாழ்க்கையை அசௌகரியத்திற்குள்ளாக்கும் எந்தவொரு தீர்மானமும் பிரதேச மட்டத்தில் எடுக்கப்படகூடாது என ஜனாதிபதியால் பணிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் கிராமங்களைத் தனிமைப்படுத்தல் ஆகியன அரச உயர் மட்டத்திலேயே தீர்மானிக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கிடைக்கும் அனைத்துத்தரவுகளையும் பகுப்பாய்வுசெய்து ஊரடங்கு சட்டத்தை நடைமுறைப்படுத்தல், ஊரடங்கு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரதேசங்களை தெரிவு செய்தல் மற்றும் தனிமைப்படுத்தப்பட வேண்டிய பிரதேசங்களை அடையாளப்படுத்துதல் என்பவை அரச உயர் மட்டத்திலேயே தீர்மானிக்கப்படுகின்றது.

ஏதேனும் ஒரு பிரதேசத்தில் நடைமுறையில் உள்ள ஊரடங்கு சட்டத்தில் மாற்றம் செய்ய தேவையான தகவல்கள் இருப்பின் அந்த அனைத்து தகவல்களையும் கோரோனா வைரஸ் ஒழிப்புக்காக தாபிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மக்கள் வாழ்க்கையை அசௌகரியத்திற்குள்ளாக்கும் எந்தவொரு தீர்மானமும் பிரதேச மட்டத்தில் எடுக்கப்படகூடாது என தெரிவிக்கப்படுகின்றது – என்றுள்ளது.

SMART HOME
SMART HOME
ROCELL BATHWARE
இலங்கையின் முதற்தரமான
* அதிரடியான விலைக் கழிவுகள்
* விநியோகம் இலவசம்
* ஒப்பந்தகாரர்களுக்கு விசேட சலுகைகள்
FLOOR TILES, WALL TILES மற்றும் குளியலறை, சாதனங்களில் முதன்மை நாமமான ROCELL உற்பத்திகளை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
Rocell Eternal elegance
A9 வீதி, கொடிகாமம்.
021 434 86 88, 077 744 86 88

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

# உயிரியல் ஆயுதத்துடன் உயிராயுதம் இணைந்தால்...!

கொரோனா வைரஸ் பரவல் ஒரு மருத்துவப் பிரச்சினையாக – சுகாதார நெருக்கடியாக – மட்டுமே பல தரப்பினராலும் நோக்கப்படுகின்றது.

ஆனால், அதையும் தாண்டி மிக மோசமான –மிக மிக ஆபத்தமான – ஒரு பரிமாணம் அதற்குள் முடங்கிக் கிடப்பது குறித்துப் பலரும் வெளிப்படையாகப் பேசவும், ஆராயவும் அஞ்சுகின்றன.

கண்ணுக்குத் தெரியாத கொரோனா வைரஸ் இன்று ஏற்படுத்தியிருக்கும் சிக்கல், அழுத்தம், பயம், பீதி, நெருக்குவாரம் என்பன அணுகுண்டையும் விஞ்சி நிற்கின்றது என்றால் அதனை மறுப்பதற்கில்லை.

அணுகுண்டுக்கே அஞ்சாத நாடுகள் எல்லாம் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிரியான கொரோனாவைக் கண்டு அஞ்சும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

ஒரு தேசத்தின் வான் எதிர்ப்புக் கவசத்தை முழு இறுக்கமானதாக – கனகச்சிதமானதாக –வைத்திருந்தால் அந்தத் தேசத்தை அணுகுண்டு நெருங்காமல் காப்பாற்ற முடியும்.

அதனால்தான் மற்ற நாடுகள் அணுகுண்டை வைத்திருந்தாலும் பல நாடுகளும் அஞ்சுவதில்லை. அது மட்டுமல்ல, அணுகுண்டு போன்ற பேரழிவு ஆயுதங்கள் நாடுகளாக அங்கீகரிக்கப்பட்ட தரப்புகளிடம்தான் உள்ளன. உலகப் பயங்கரவாத அமைப்புகளின் கைகளில் அவை கிட்டாத வரை உலகம் பாதுகாப்பானது என்பதுதான் பொதுவான கருத்து. அது ஓரளவு உண்மையும் கூட.

சர்வதேசப் பயங்கரவாத, தீவிரவாத அமைப்புகள் அவற்றைச் சுவீகரித்துக் கொள்ளாவரை அணுகுண்டு அச்சுறுத்தல் இல்லவே இல்லை என்ற அதீத நம்பிக்கையில்தான் சர்வதேச நாடுகள் இருக்கின்றன.

ஆனால் இன்று நிலைமை தலைகீழாகி விட்டது.

அணுகுண்டை விட வலிமையான பேரிழப்பைத் தரக் கூடி கொரோனா வைரஸின் நிலைமை அப்படியல்ல.

இரண்டு, மூன்று அணுகுண்டுகள் வெடித்தமையால் ஏற்படக் கூடிய ஸ்தம்பித நிலையை – பொருளாதாரப் பாதிப்பை – ஆள்கொலை மற்றும் மனிதப் பாதிப்புகளை – ஏன் ஒட்டு மொத்த உலக முடக்கத்தையே – இந்தக் கொரோனா வைரஸ் என்ற கண்ணுக்குத் தெரியாத பேரரக்கன் ஏற்படுத்தி நிற்கின்றான்.

பல்வேறு தேச பக்திப் பாடல்களைப் பாடிய நாமகக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்பிள்ளை கூறியமை போன்று 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற அவரின் பாடலின் அடிதான் நினைவுக்கு வருகின்றது.

அணுகுண்டு மனிதப் பேரழிவு ஆயுதம்தான். ஆனால் பயங்கரவாத அமைப்புகள், தீவிரவாத இயக்கங்கள், இனவெறிப் போக்கும் கட்டமைப்புகள் போன்றவற்றின் கைகளுக்கு அது எட்டாது என்பதால் உலகம் நம்பிக்கையுடன் வாழ்வியலைத் தொடர்ந்தது.

ஆனால் அணுகுண்டை ஒத்த உயிரியல் ஆயுதம் போன்ற வடிவத்தை எடுத்திருக்கும் கொரோனா வைரஸ் அப்படி அல்ல. அது தேடிப் போய் ஒவ்வொருவரிலும் தானாக ஒட்டி உறைகின்றது.

விரும்பும் எந்தத் தரப்பும் அதை இன்று பெரும் முயற்சி ஏதுமின்றி – தேடியலையாமல் – ஆரவாரம் பண்ணாமல் – சத்தம் சந்தடி செய்யாமல் – சுவீகரித்துக் கொள்ளமுடியும்.

உலகப் போராட்ட வரலாறுகளில் கடந்த நூற்றாண்டின் இறுதியில் அறிமுகமாகி உலகையே வெலவெலக்க வைத்த இன்னொரு ஆயுதப் பிரயோக முறைமை உண்டு. அது – உயிராயுதம். தன்னைப் பலி கொடுத்து எதிரிக்குப் பேரிழப்பை ஏற்படுத்தும் அந்த ஆயுதத்தின் வலிமையை இலங்கை நன்கு அறிந்திருக்கின்றது. தென்னிலங்கை அதன் மோசமான வீரியத்தை அனுபவித்து அதிர்ந்திருக்கின்றது.

இந்த உயிராயுதத்தின் கையில் வலிமையான உயிரியல் ஆயுதம் சிக்கினால் –

அல்லது உயிரியல் ஆயுதத்தை வகையாகப் பயன்படுத்த உயிராயுதம் முயன்றால் – உலகத்தின் நிலைமை மிக மிக மோசமாகிவிடும். சகிக்க இயலாத ஆபத்தாகிவிடும்.

அமெரிக்கா போன்ற வல்லரசுகள், பேரரசுகள் கூட உயிராயுதம் – உயிரியல் ஆயுதங்களின் கூட்டணிக்கு முகம் கொடுக்க முடியாத பேரவலம் நிகழும்.

ஏன் உலக ஒழுங்கே தலைகீழாகும் விபரீதம் நேர்ந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

கொரோனாத் தொற்றுக்கு அஞ்சி சிறையில் இருக்கும் விளக்கமறியல் கைதிகளைக் கூட பல நாடுகள் விடுதலை செய்கின்றன.

ஆனால், அந்த நெருக்குவாரத்துக்குள் அல்லலுறும் ஈரான் போன்ற நாடுகள் மீதான தனது பொருளாதாரத் தடைகளை உலகப் பொலிஸ்காரனான அமெரிக்கா போன்றவை தொடர்கின்றன.

இந்த அழிவு நிலையிலும் இந்த அதிகாரமிடுக்கு, சில மதசார்பு தீவிரப் போக்கு நாடுகளைப் பிழையான வழிக்கு நெட்டித்தள்ளும்.

பேரழிவு தரும் ஆயுதங்கள் கைகளுக்குக் கிடைக்காமையால் இதுவரை அடங்கியிருந்த தரப்புகள் கொரோனா வைரஸ் என்ற பேரழிவு தரும் உயிரியல் ஆயுதத்தைக் கையில் எடுத்துத் தமது கைவரிசையைக் காட்ட முயன்றால் உலகம் சகிக்க முடியாத நிலைமை ஏற்படும்.

இரண்டாம் உலகப் போரின்போது அணுகுண்டு வெடிப்புகளை அடுத்து உலகில் ஏற்பட்ட புதிய சமரசப் போக்குப் போன்று நேற்று வரை நிலவிய உலக அதிகாரப் போக்குக்கான போட்டி, முறுகல்கள், அழுத்தங்கள், நெருக்கடிகள், கொந்தளிப்புகளுக்குப் பின்னர் ஒரு புதிய சமரச நிலையை நோக்கி நகரவேண்டிய கட்டாயத்தை நவீன உலகுக்கு கொரோனா வைரஸ் ஏற்படுத்தினாலும் ஏற்படுத்தும்.

# கொரோனா நோயாளிகளுக்கு விசேட கட்டில்கள் தயாரிப்பு



கொரோனா நோயாளிகளுக்கு வைத்தியசாலைகளில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சையளிப்பதற்கு பொருத்தமான விசேட கட்டில்கள் நாட்டில் போதியளவு இல்லாத நிலையில், இலங் கையிலுள்ள தனியார் தொழிற்சாலை ஒன்று அதனை தயாரிக்க ஆரம்பித்துள்ளது.

நீர்கொழும்பு – தளுபத்தை பிரதேசத்திலுள்ள ரெக்ஸ் என்ற தொழிற்சாலையே, கொரோனாநோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக இந்த விசேட கட்டில்களை தயா ரித்து வருகிறது.

கைத்தொழில் அமைச்சு இந்த கட்டில்களை தயாரிப் பதற்கான நடவடிக்கையை மேற்கொண் டுள்ளது. ஆரம்பக்கட்டமாக 100 கட்டில்கள் தயாரிக்கப்படவுள்ளன.

# கசிப்பு உற்பத்தி நிலையத்தில் மதனமோதக பக்கெட் மீட்பு!

மட்டக்களப்பு – இருதயபுரம் மேற்குப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையமொன்றை, நேற்று முற்றுகையிட்ட மதுவரித் திணைக்கள அதிகாரிகள், வீடொன்றிலிருந்து ஆயிரக்கணக்கான மதனமோதகம் எனப்படும் கஞ்சா கலந்த அபின் உருளைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

ஊரடங்குசட்டம்பிறப்பிக்கப்பட்டுள்ள இக்காலகட்டத்தில் சட்டவிரோத போதைப் பொருள் பாவனை அதிகரித்துவருவதாக தெரிவிக்கப்பட்டுவந்த நிலையில், மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்களம் தொடர்ச்சியான சோதனை நடவடிக் கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன்கீழ், மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட இருதயபுரம் மேற்கு பகுதியிலுள்ள வீடொன்றில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டது. இதன்போது ஒருவர் கைதுசெய்யப் பட்டார். கசிப்பு உற்பத்தி நிலையத்தின் உரிமையாளர் தப்பிச்சென்றிருந்தார்.

கைதுசெய்யப்பட்டவரிடம் மேற் கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கசிப்பு உற்பத்தி நிலைய உரிமையாளரின் வீட்டில் மதுவரித் திணைக்களத்தால் சோதனை நடத்தப் பட்டது.

உரிமையாளரின் வீட்டின் முற்றத்திலும் வீட்டின் பின் பகுதியிலும் குழிகளில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 53 அபின் பக்கெட்டுகள் மீட்கப்பட்டன.

இந்த 53 அபின் பக்கெட்டுகளில் அடைக்கப்பட்டிருந்த 1,325 மதனமோதகம் எனப்படும் கஞ்சா கலந்த அபின் உருளைகளைகள் மீட்கப்பட்டனவென, மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக் களத்தின் பிரதான பரிசோதகர் எஸ்.ரஞ்சன் தெரிவித்தார்.

# தென் மாகாணத்தில் 2,173 பேர் இப்போது தனிமைப்படுத்தலுக்கு

தென் மாகாணத்தில் 2,173 பேர் இன்று தனிமைப்படுத்தலுக்கு உட்படுத் தப்பட்டுள்ளனர் என்பதுடன், மேலும் 1,816 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்துள்ளனரென, தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சந்திம சிறிதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, காலி மாவட்டதில் 1,193 பேரும் மாத்தறையில் 445 பேரும் ஹம்பாந்தோட்டையில் 535 பேரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனரெனவும் 734 க்கு மேற்பட்டோர் காலி மாவட்டத்தில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்துள்ள அதேவேளை, மாத்தறையில் 710 பேரும், ஹம்பாந்தோட்டையில் 372 பேரும் தனிமைப்படுத்தலை நிறைவு செய்துள்ளனரென, வைத்தியர் சந்திம சிறிதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# ஊரடங்கு வேளை நீச்சல் தடாகத்தில் மைத்திரியின் மகன் கொண்டட்டம்?



ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த சமயத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹம் சிறிசேன, நண்பர்களுடன் பார்ட்டியில் இருந்தாரா என்ற சர்ச்சை தோன்றியுள்ளது.

கொழும்பிலுள்ள பிரபல விடுதியொன்றின் நீச்சல் தடாகத்தில் நேற்று முன்தினம் தொடக்கம் நேற்று அதிகாலை 2.30 மணி வரை அவர்கள் நீச்சல் தடாக்கத்தில் கும்மாளமிட்டார்கள் எனப் புலனாய்வு செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் புலனாய்வு செய்தியாளர் நாமினி விஜேதாச இதனை தனது பேஸ்புக்கில் பதிவிட்டுள்ளார்.

பதில் பொலிஸ்மா அதிபருக்கு வட்ஸ் அப் மூலம் இந்த தகவலை அனுப்பியதாகவும், அவர் அதை பார்த்த போதும், தனது அழைப்பிற்கு பதிலளிக்கவில்லையென தெரிவித்துள்ளார்.

கேம்ப்ரிட்ஜ் பிளேஸிலுள்ள மாடி நீச்சல் தடாகத்தில் இந்த பார்ட்டி நடந்ததாகவும், வீதியில் பொலிஸார் நின்றிருந்த போதும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென தெரிவித்துள்ளார்.

இந்த பதிவின் கீழ் கருத்திட்ட தஹம் சிறிசேன இதனை மறுத்துள்ளார். செய்தியாளர் மீது சட்ட நடவடிக்கையெடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளார்.

# ஆயிரத்து 71 பேருக்கு இந்தியாவில் தொற்று





இந்தியாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை ஆயிரத்து 71 ஆகவும், உயிரிழந்தோர் எண்ணிக்கை 29 ஆகவும் அதிகரித்துள்ளது என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவுவதைத் தடுக்கும் நோக்கில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு 6ஆவது நாளாகத் தொடர்கின்றது. இருப்பினும் வைரஸின் தாக்கம் நாளுக்கு நாள் உயர்ந்து வருகின்றது.

இதுகுறித்து மத்திய சுகதாரத்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை இந்தியாவில் ஆயிரத்து 071 ஆக அதிகரித்துள்ளது, உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 29 ஆக அதிகரித்துள்ளது. இதில் சிகிச்சை பெற்று வருபவர்கள் எண்ணிக்கை 942. குணமடைந்து சென்றவர்கள் எண்ணிக்கை 99.

காலை 10.30 மணி நிலவரப்படி மகாரஷ்டிரா மாநிலத்தில் 2 பேர் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து, மகாராஷ்டிராவில் அதிகபட்சமாக 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

குஜராத் மாநிலத்தில் 5 பேர், கர்நாடக மாநிலத்தில் 3 பேர், மத்தியப் பிரதேசம், டெல்லி, ஜம்மு காஷ்மீர் ஆகியவற்றில் தலா 2 பேரும் உயிரிழந்துள்ளனர்.

கேரளா, தெலங்கானா, தமிழகம், பிஹார், மே.வங்கம், பஞ்சாப், இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் தலா ஒருவர் உயிரிழந்துள்ளார். பாதிக்கப்பட்டவர்களில் 49 பேர் வெளிநாட்டினர்.

# தமிழகத்தில் 67 பேருக்கு கொரோனா

சென்னை, மார்ச் 30

தமிழகத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 67 ஆக அதிகரித்துள்ளது என்று முதல்வர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து, உயர் அதிகாரிகளுடன் ஆலோசித்த பின் முதல்வர் எடப்பாடி பழனிசாமி இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார்.. அப்போது அவர் கூறியதாவது: –

தமிழகத்தில் கொரோனா தொற்று ஏற்பட்டவர்களின் எண்ணிக்கை 67 ஆக அதிகரித்துள்ளது. நேற்று வரை 50 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்த நிலையில், தற்போது புதிதாக 17 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. தமிழகத்தில் ஒருவர் மட்டும்தான் உயிரிழந்துள்ளார்

கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக தலைமைச் செயலாளர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. கொரோனா உறுதி செய்யப்பட்டவர்களில் 5 பேர் குணமடைந்துள்ளனர். 25 லட்சம் என் – 95 முகக் கவசங்கள் வாங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. கொரோனா அறிகுறி உள்ள 121 பேரின் ஆய்வு முடிவுகள் இன்னும் வரவேண்டியுள்ளது. 1.5 கோடி முகக்கவசங்கள் வாங்குவதற்கு தமிழக அரசு கொள்முதல் ஆணை வழங்கியுள்ளது.

கொரோனாவுக்கான ஒரே தடுப்பு மருந்து மக்கள் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்தக்கொள்வதுதான். கொரோனா அறிகுறி உள்ளவர்களுக்கு மட்டுமே பரிசோதனை நடத்தப்படும். பிற மாநிலங்களைவிட தமிழகத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்பு நன்றாகவே உள்ளது.

கொரோனா பரவலில் தமிழகம் 2ஆவது கட்டத்திலிருந்து 3ஆவது கட்டத்துக்கு செல்லாமல் தடுக்கும் பணியில் தீவிரம் காட்டப்பட்டுள்ளது. கொரோனா வியத்தில் அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டி அரசியல் செய்வது என்பது தேவையற்றது – இவ்வாறு அவர் கூறினார்.

# 8 மாத கர்ப்பிணி மனைவியுடன் 100 கி.மீ. தூரம் நடந்த இளைஞர்

## கொரோனா காப்பு ஊரடங்கால் வந்த வினை

இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலத்தில் இருந்து இளைஞர் ஒருவர் தனது 8 மாத கர்ப்பிணி மனைவியுடன் வெளியேறிய 2 நாட்களாக சுமார் 100 கிலோ மீற்றர் தூரம் நடந்து மீரட்டை வந்தடைந்தார்.

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக இருந்த வீட்டைவிட்டு வெளியேறச் சொன்னதால் சொந்த ஊருக்குச் செல்வதற்காக நடந்தே வந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

உத்தரபிரதேச மாநிலம் புலந்தாகர் என்ற இடத்தை சேர்ந்த வாலிபர் வகீலும் அவரது மனைவி யாஸ்மினும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டபோது மிகவும் சோர்ந்து போயிருந்தனர். பின்னர் அவர்களை அம்புலன்ஸ் ஒன்றில் ஏற்றிச் சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தனர்.

வகீல் உத்தரபிரதேச மாநிலம் சகரான் பூரில் ஒரு தொழிற்சாலையில் வேலை பார்த்து வந்தார். மனைவியையும் அழைத்து சென்றிருந்தார். அவருக்கு தொழிற்சாலை நிர்வாகமே வீடு ஒதுக்கி கொடுத்திருந்தது.

21 நாள் ஊரடங்கு அறிவிக்கப்பட்டதையடுத்து கணவன் – மனைவி இருவரையும் அந்த வீட்டை காலி செய்யும்படி தொழிற்சாலை நிர்வாகம் கூறியது. எனவே இருவரும் வீட்டைவிட்டு வெளியேறினார்கள். யாஸ்மின் 8 மாத கர்ப்பிணியாக இருந்தார்.

ஊருக்கு செல்வதற்கு பஸ் நிலையம் வந்தனர். போக்குவரத்து அனைத்தும் நிறுத்தப்பட்டிருந்ததால் நடந்தே செல்வதற்கு முடிவெடுத்தனர்.

அவர்கள் இருவரும் கடந்த 2 நாள்களாக சுமார் 100 கிலோ மீட்டர் தூரம் நடந்து மீரட்டை வந்தடைந்தனர். அவர்கள் கையில் பணம் எதுவும் இல்லை. எனவே சாப்பிடவும் இல்லை.

மிகவும் சோர்வான நிலையில் மீரட் பஸ் நிலையம் அருகே வந்து அமர்ந்தனர். அவர்கள் நிலைமையை அறிந்த உள்ளூர் மக்கள் அவர்களுக்கு உதவ முன் வந்தார்கள். அவர்களாக பணம் வசூலித்து கொடுத்தனர்.

உள்ளூர் சப் – இன்ஸ்பெக்டர் பெரம்பல்சிங்கும் தேவையான உதவிகளை செய்தார். அவர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு ஆம்புலன்ஸை ஏற்பாடு செய்தார்கள். அதில் இருவரையும் ஏற்றி சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தனர்.

# மாநில எல்லைகளை மூடிவிடப் பணிப்பு

## மாநில அரசுகளுக்கு மத்திய அரசு விடுத்தது

இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் எல்லைகளையும் மூடும்படி மத்திய அரசு புதிய உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஏழ்மைக் கிராமங்களிலிருந்து பெரு நகரங்களுக்குப் புலம்பெயர்ந்து நாளாந்தக் கூலித் தொழிலில் ஈடுபட்டுவந்த மக்கள் ஊரடங்கு உத்தரவை அடுத்து தமது சொந்த ஊர்களுக்குத் திரும்பத் தொடங்கியிருக்கிறார்கள்.

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு வசதியாக சமூக விலகலை ஏற்படுத்தும் நோக்கோடு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில், அதற்கு நேர் எதிர்மாறாக மக்கள் கூட்டம் கூட்டமாக இடம்பெயரத் தொடங்கியிருப்பது புதிய சிக்கலைத் தோற்றுவித்துள்ளது.

இந்த ஆபத்தான இடம்பெயர்வைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்தோடு மாநிலங்கள் அனைத்தும் தமது எல்லைகளை மூடிவிடவேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இடம்பெயரும் மக்கள் பல மாநிலங்களில் உள்ளூர் போக்குவரத்தை பயன்படுத்திக் கொள்வதுடன் சிலர் நடந்தே தங்கள் சொந்த ஊர்களுக் குச் செல்கின்றனர். இவ்வாறு பல ரும் தங்கள் சொந்த ஊர்களை சென்று சேர்ந்து வருகின்றனர். இவர் கள் கிராமங்கள் மற்றும் சிறுநகரங்களுக்கு திரும்பி வரும்வேளையில் அங்கும் கொரோனா வைரஸ் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் அதைத் தடுக்கும் விதமாக அனைத்து யூனியன் பிரதேசம், மாநில எல்லைகளையும் மூடுமாறு மத்திய அரசு புதிய உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

தொழிலாளர்கள் பணியாற்றும் பகுதிகளிலேயே தங்கி இருக்க அவர் களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் அவர்களுக்குத் தேவையான உணவு, இருப்பிடம் ஆகியவற்றை ஏற்படுத்தித் தருமாறு மாநில, யூனியன் பிரதேச அரசுகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# புலம்பெயர் தொழிலாளருக்கு ஒரு மாத வாடகை விலக்கு

## மீறினால் உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை

ஊரடங்கு உத்தரவு காரணமாக இடம்பெயர்ந்த புலம்பெயர் தொழிலாளர்களிடம் ஒரு மாதத்துக்கான வீட்டு வாடகையை உரிமையாளர்கள் வாங்க கூடாது என இந்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

கொரோனா பரவுவதை தடுப்பதற்கு நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் தினக்கூலிகள், கட்டடப் பணியாளர்கள் உள்ளிட்ட தொழிலாளர்கள் வேலையின்றி தவித்து வருகிறார்கள்.

ஆனாலும் அவர்கள் வசிக்கும் வாடகை வீடுகளின் உரிமையாளர்கள் தமக்கான வாடகையைத் தரவேண்டும் என்று நிர்ப்பந்திக்கிறார்கள்.

இதுதொடர்பாக மாநில அரசுகளுக்கு உள்துறை அமைச்சக செயலாளர் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி உள்ளார். அதில் கூறியிருப்பதாவது:-

இடம்பெயர்ந்த வெளி மாநில தொழிலாளர்கள் உள்ளிட்ட தொழிலாளர்களிடம் ஒரு மாதத்துக்கான வீட்டு வாடகையை உரிமையாளர்கள் வாங்க கூடாது.

வீட்டு உரிமையாளர்கள் அவர்களது வீடுகளில் வாடகைக்கு இருக்கும் தொழிலாளர்களையும், மாணவர்களையும் வலுகட்டாயமாக வெளியேற்றகூடாது. இந்த உத்தரவுகளை மீறினால் அவர்கள் மீது மாநில அரசுகள் சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மேலும் ஊரடங்கு உத்தரவை காரணம் காட்டி தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களின் சம்பளத்தில் எந்த பிடித்தமும் செய்யக்கூடாது.

வெளிமாநில தொழிலாளர்கள் உள்ளிட்ட ஏழைகளுக்கு உணவு, இருப்பிட வசதியை மாநில அரசு செய்து தரவேண்டும் என்று அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் கொரோனாவால் 2 லட்சம் பேர் வரையில் இறப்பர்

கொரோனா வைரஸ் தாக்கத்தால் 2 லட்சம் அமெரிக்கர்கள் உயிரிழப்பார்கள் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. அடுத்த இரண்டு வாரங் களில் அமெரிக்காவின் இறப்பு எண்ணிக்கை அதன் உச்சத்தைத் தொடும் என்று அதிபர் டொனால்ட் ட்ரம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித் தார்.

“இறப்பு எண்ணிக்கை அதன் உச்சத்தை அடுத்த இரு வாரங்களில் தொடும். அதனால் கொரோனா தொடர்பான வழிகாட்டல்களை ஏப்ரல் 30ஆம் திகதி வரைக்கும் நீடிக்கின் றோம்” என்றார் ட்ரம்ப்.

முன்னதாக ஏப்ரல் 12ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்திற்கு முன்பாக அமெரிக்க வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு இயல்பு நிலைக்கு வந்துவிடும் என்றும் பொருளாதா ரத்தை மீட்டெடுக்க அனைவரும் பாடுபடவேண டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

ஆனால், ட்ரம்பின் எதிர்பார்ப்புக்கு நேர் மாறாக வைரஸ் பரவல் கடந்த சில நாள்களாக மிகத் தீவிரமடைந்துள்ளது. உலகில் வேறு எந்த நாட்டையும்விட மிக அதிகளவானோர், ஒரு லட்சத்து 42 ஆயிரம் பேர் நோய்த் தொற றுக்குள்ளாகியுள்ளனர். அவர்களில் மிகக் குறைந்தளவினரான 4 ஆயிரத்து 435 பேர் மட்டுமே குணமடைந்துள்ளனர்.

இந்த நிலையில் அமெரிக்காவில் 2 லட்சம் பேர் இந்த வைரஸ் தொற்றால் உயிரிழப்பார் கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக ட்ரம்ப் நிர் வாகத்தினுடைய கொரோனா வைரஸ் சிறப்புப் பணிக் குழுவின் தலைவர் மருத்துவர் அந் தோனி பவுசி தெரிவித்தார்.

அமெரிக்காவில் இந்த வைரஸின் தாக் கத்தால் பல மில்லியன் மக்கள் பாதிக்கப்படு வார்கள் என்பதும் அவர்களில் ஒரு லட்சம் முதல் 2 லட்சம் வரையானவர்கள் உயிரிழப் பார்கள் என்பதும் புரிந்துகொள்ளப்படக் கூடியதே என்றார் அவர்.

# 34 ஆயிரம் மரணங்கள்

## கொலைவெறி அடங்காத கொரோனா

கொலைகாரக் கொள்ளை நோயான கொரோனாவுக்கு உயிரி ழந்தவர்களின் எண் ணிக்கை 34 ஆயிரத்தை எட்டியுள்ளது. 7 லட்சத்து 23 ஆயிரம் பேர் பாதிக் கப்பட்டுள்ளனர். அவர்களில் 5 லட்சத்து 38 ஆயிரம் பேர் தொடர்ந்தும் தொற்றுக்குள்ளாகியிருக்கின்றனர். ஒரு லட்சத்து 52 ஆயிரம் பேர் குணமடைந்துள்ளனர்.

தொடர்ந்தும் தொற்றுக்குள்ளாகி இருப்பவர்களில் 27 ஆயிரம் பேரின் நிலை மோசமாக இருப்பதால் அடுத்து வரும் நாள்களிலும் உயிரிழப்பு எண்ணிக்கை தொடர்ந்தும் அதி கரிப்பதற்கான வாய்ப்புகளேஅதிகமுள்ளன என்கிறார்கள் நிபுணர்கள்.

இன்று நண்பகல் வரையில் ஆகக் கூடுதலாக அமெரிக் காவில் 1 லட்சத்து 42 ஆயிரத்து 735 பேர் பாதிக்கப்பட்டுள்ள னர். 2 ஆயிரத்து 488 பேர் உயிரிழந்துள்ளனர். இத்தாலியில் 97 ஆயிரத்து 689 பேர் தொற்றுக்குளாகியுள்ளனர். எனினும் உலகில் ஆகக் கூடுதலான உயிரிழப்பு இங்கே நிகழ்ந்துள்ளது. 10 ஆயிரத்து 779 பேர் உயிரிழந்தனர். சீனாவில் 81 ஆயிரத்து 470 பேர் பாதிக்கப்பட்டனர். 3 ஆயிரத்து 304 பேர் உயிரிழந் தனர். எனினும் பாதிக்கப்பட்டவர்களில் 90 வீதத்திற்கும் அதி கமானவர்கள், 75 ஆயிரத்து 700 பேர் குணமடைந்துள்ளனர். ஸ்பெயின் நாடு சீனாவின் இடத்தை வேகமாக நெருங்கி வரு கின்றது. அங்கு 80 ஆயிரத்து 110 பேருக்குத் தொற்று ஏற்பட் டுள்ளது. 6 ஆயிரத்து 803 பேர் அங்கு உயிரிழந்திருக்கின் றனர்.

ஜேர்மனியில் 62 ஆயிரத்து 435 பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. எனினும் ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி, பிரிட் டன் போன்ற ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இங்கு உயிரிழப்புக்கள் மிகக் குறைவு. இதுவரை 541 பேர் அங்கு உயிரிழந்திருக்கின்றனர்.

பிரான்ஸில் 40 ஆயிரத்து 174 பேருக்குத் தொற்று ஏற்பட் டுள்ளது. 2 ஆயிரத்து 606 பேர் உயிரிழந்திருக்கின்றனர். ஈரா னில் 38 ஆயிரத்து 309 பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. 2 ஆயிரத்து 640 பேர் உயிரிழந்திருக்கின்றனர். லண்டனில் 19 ஆயிரத்து 522 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். ஆயி ரத்து 228 பேர் உயிரிழந்திருக்கின்றனர். நெதர்லாந்தில் 771 பேரும் சுவிற்சர்லாந்தில் 300 பேரும் பெல்ஜியத்தில் 431 பேரும் உயிரிழந்திருக்கின்றனர்.

ஏனைய நாடுகளில் 200க்கும் குறைவான உயிரிழப்புக் கள் பதிவாகி இருக்கின்றன. 199 நாடுகள் மற்றும் தன்னாட்சி நிலப்பரப்புக்களில் நோய்த் தொற்றுப் பரவியிருக்கின்றது.

# உலகின் மிக வயதான மனிதருக்கு வயது 112

கொரோனா வைரஸ் 60 வயதுக்கு மேற் பட்டவர்களைத் தாக்கி உயிரிழக்கச் செய்து கொண்டிருக்கும் இந்த வேளையில் உலகின் மிக வயதானவரான பொப் வெய்டன் நேற்று ஞாயிற்றுக்கிழமை தனது 112ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.

1908ஆம் ஆண்டு மார்ச் 29ஆம் திகதி பிறந்தவர் வெய்டன். தன்னுடைய காலத்தில் இரு உலகப் போர்களைப் பார்த்தவர். தனது தாய் சகோதரர்களுடன் விமானக் குண்டுகளில் இருந்து தப்புவதற்காக மாடிப் படிகளின் கீழ் பதுங்கியிருந்ததை இன்றும் ஞாபகப்படுத் துகின்றார்.

உலகின் வயதான மனிதர் என்று கின்னர் உலக சாதனைப் பதிவாளர்களால் சான்றுப்படுத் தப்பட்ட ஜப்பானைச் சேர்ந்தவரான சிடெஸ்டு வட்டநபே கடந்த பெப்ரவரி மாதம் உயிரழந்தமை யைத் தொடர்ந்து உலகின் வயதான மனிதர் என்ற சாதனை வெய்டனை வந்தடைந்தி ருக்கிறது.

அதற்காகத் தான் மகிழ்ச்சியடையவில்லை என்கிறார் வெய்டன். “அதன் பொருள் (தான்



சாதனை படைத்திருப்பது) ஒருவர் இறந்து விட்டார்” என்பதுதான் என்கிறார் அவர். கின் னஸ் சாதனைக்கான சான்றிதழ் அவருக்கு வழங்கப்பட்ட மறுநாள் அவர் உயிரிழந்தார்.

தான் நீண்ட நாள்கள் வாழ்கிறார் என்பது ஒரு தகவல் மட்டுமே அதற்கு மேல் அதற்கு எந் தப் பெறுமதியும் இல்லை என்றும் அவர் மேலும் கூறுகின்றார்.

“நான் உயிரோடு இருக்க வேண்டும் என்று நினைத்ததைத் தவிர நீண்ட காலம் வாழ்வதற் காக எதனையும் தனியாகச் செய்யவில்லை. அது எனது அதிர்ஷ்டம்” என்கிறார் அவர்.

# கொரோனாவை வெல்ல உலகம் தனது பயத்தை முறியடிக்கட்டும்

## எபோலாவை வென்ற லைபீரியாவின் முன்னாள் அதிபர் அறைகூவல்

கொரோனா வைரஸை வெற்றிகொள்ள உலகம் முதலில் தனது பயத்தை முறியடிக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார் நோபல் பரிசு பெற்றவரும் ‘எபோலா’ எனும் வைரஸ் மேற்கு ஆபிரிக்க நாடுகளைத் தாக்கிய சமயம் லைபீரியாவின் அதிபராக இருந்தவருமான எலன் ஜோன்சன் சிறிலீஃப்.

உலக நாடுகள் முழுவதையும் தற்போது கொரோனா வைரஸ் அச்சுறுத்தி வந்ததைப் போலவே 2014ஆம் ஆண்டில் மேற்கு ஆபிரிக்க நாடுகளை எபோலா வைரஸ் அச்சுறுத்தியது.

வீதியில் நடந்துகொண்டிருந்தவர்கள் திடீரென விழுந்து இறந்தார்கள். இதனால் லைபீரியா, சியாரா லியோன், குனியா போன்ற நாடுகள் பெரிதும் பாதி க்கப் பட்டன.

2014 முதல் 2016ஆம் ஆண்டுக்குள் இந்த மூன்று நாடுகளிலும் மட்டும் 11 ஆயிரத்து 325 பேர் உயிரிழந் தார்கள். அவர்களில் அதிகளவிலான 4 ஆயிரத்து 810 பேர் லைபீரியாவிலேயே மாண்டனர்.

நோய்த் தொற்றுத் தீவிரமாகப் பரவிய காலத்தில் லைபீரியாவின் அதிபராகப் பதவி வகித்தவர் ஜோன்சன் சிறிலிஃப்.

இன்றைய கொரோனா பாதிப்பு குறித்து அவரிடம் பி.பி.சி. உலக சேவை கருத்துக் கேட்டது.

நாம் சமூகத்திற்குள்தான் வாழ்ந்தாக வேண்டும் என்றாலும் பயம் மனிதர்களை ஓடவும், மறைக்கவும், தங்கள் பாதுகாப்புக்காக பதுக்கவும் உந்தித்துள்ளும்.

இது எனக்குத் தெரியும் 2014இல் நானும் இதே




தவறுகளைச் செய்தேன். தொற்றால் பாதிக்கப்பட்ட ஏனைய நாடுகளும் இதையே செய்தன. ஆனால் நாம் அதைத் திருத்திக்கொண்டோம், எல்லோருமாக ஒருங்கிணைந்து செயற்பட்டோம். எபோலாவை வென்றோம்.

நோய்த் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்காக நாடு களின் எல்லைகள் மூடப்படும் ஒரு முக்கியமான திருப் பத்தில் நாம் நிற்கின்றோம்.

எங்கள் நாடு எமக்கானது அதேபோல் ஒவ்வொரு நாடும் அவரவருக்கானது என்று இதனைப் பிழையாக அர்த்தப்படுத்திக்கொள்ள வேண்டாம். இது இன ரீதி யான எதிர்வினையாற்றல் அல்ல, இந்த எல்லை மூடல் வேறு வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றது.

எல்லைகள் மூடப்பட்டாலும் நிபுணத்துவ உதவிகள் அதாவது அறிவுப் பரிமாற்றம், விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்கள், கருவிகள், மருந்துகள், ஆட்கள் என எல் லாமே பகிரப்படுவதை நான் காண்கின்றேன்.

இது நாடுகளுக்குள்ளும் சர்வதேச எல்லைகளைத் தாண்டியும் நடக்கிறது. இது தவிர்க்க முடியாதது. மிகத் தாமதமான எதிர்வினைதான் என்றாலும் ஒவ்வொரு தனிநபரும் ஒவ்வொரு தேசமும் இதில் தன் பங்கைச் சரியாகச் செய்தாகவேண்டும்.

இந்தப் புரிதல்தான் மேற்கு ஆபிரிக்காவில் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான திருப்புமுனையாக இருந் தது.

லைபீரியாவில் எப்போலாவிற்குப் பின்னர் நாம் மீண்டெழுந்தோம், சுகாதார நடைமுறைகள் உரிய வகையில் அமைந்திருக்கக்கூடிய ஒரு சமூகமாக இன்னும் உறுதிப்பாடடைந்தோம், அதுவே இப்போது கொவிட் - 19 வைரஸ் தொற்றைத் திறம்பட நிர்வகிப்ப தற்கு எமக்கு உதவுகின்றது.

இதுதான் நாம் அனைவரும் இன்று பயணிக்க வேண்டிய பாதை என்று உறுதியாக நம்புகின்றேன்.

கொரோனாவை வெல்ல அதன் பரவும் வேகத்தைத் தடுப்பதற்கும், பரவும் சங்கிலித் தொடரை உடைப்பதற் கும் வைரஸ் தாக்கம் உச்சத்திற்குச் செல்வதற்கு எடுத்துக்கொள்ளும் காலத்தை நீடிப்பதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் நாம் அனை வரும் இப்போது அவசியம் செய்ய வேண்டியவை கள்.

மனிதாபிமானம்தான் முக்கியமானது என்பதை அனைவரும் உணர்ந்து நடப்போம் - என்றார் அவர்.

# கொரோனோவும் கொலைகாரர்களும்

## நீதியற்ற தேசத்தில் நாதியவற்றவர்களின் நிலை!

- முருகபூபதி -



பலத்த காயங்களுடன் தப்பிவந்த பொன்னுத் துரை மகேஸ்வரன் என்பவர் தமது உறவினர்களுக்குத் தகவல் கொடுத்தமையை அடுத்தே இக்கொலைகள் பற்றிய விவரங்கள் வெளியே தெரிய வந்தன. அவர் வழங்கிய தகவலினால், படுகொலை செய்யப்பட்டவர்களது சடலங்கள் மலசலகூட குழியிலிருந்து பின்னர் காவல் துறையினரால் மீட்கப்பட்டன.

கொரோனோ வைரஸின் உக்கிர தாண்டவத்திற்கு மத்தியில் இலங்கையில் ஒரு மரணதண்டனை கைதி ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலையாகியுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதிக்கு முன்பிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது பதவிக்காலத்தின் இறுதிப்பகுதியில், போதைவஸ்து குற்றவாளிகளுக்கு மரணதண்டனை விதிப்பேன், எவர் தடுத்தாலும் நிறைவேற்றுவேன் எனச்சொல்லிக்கொண்டே இருந்தவர். மரண தண்டனை நிறைவேற்றும் அலுகோசு பதவிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததை மக்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

தற்போது இலங்கை சிறைகளில் நூற்றுக்கணக்கான மரணதண்டனைக்கைதிகளும் ஆயுள்கைதிகளும் இருக்கின்றனர். அவர்களில் பலர் கொலை, கூட்டு பாலியல் வன்முறை முதலான குற்றங்களில் ஈடுபட்டு நீதிமன்றங்களினால் மரணதண்டனை தீர்ப்புக்குள்ளாகியவர்கள்.

அவர்களில் இலங்கை பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த படையினரும் இடம்பெற்றிருந்தனர். தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2015 இற்கு முன்னர் பதவியிலிருந்த அரசில் பாதுகாப்புச் செயலாளராக இருந்தவர்.

அதற்கு முன்னர் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி தென்மராட்சி மிருசுவிலில் ஐந்து வயது குழந்தை உட்பட எட்டுத்தமிழர்கள் கொலைசெய்யப்பட்டு, ஒரு வீட்டின் மலகூட குழியில் புதைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் நினைவூட்ட வேண்டிய செய்திக்குறிப்பு பின்வருமாறு:–

வடஇலங்கையில் நீடித்திருந்த போர்க்காலத்தின்போது தென்மராட்சியில் தமது வீடுகளை விட்டு வெளியேறிய சிலர் தமது வீடுகளை மீளச்சென்று பார்ப்பதற்காகச் சென்றனர். அவர்களின் வீடுகள் மிருசுவிலில் அமைந்திருந்தன.

அவ்வாறு சென்றவர்களை, அங்கிருந்த இராணுவத்தினர் கைதுசெய்தனர். இச்சம்பவம் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி நடந்திருப்பதாக அறியப்படுகிறது. அத்துடன் மறுநாள் கைதானவர்கள் எட்டுப்பேரும் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளனர் எனவும் அறியப்படுகிறது.

இவர்கள் உடுப்பிட்டிக்கு முன்னர் இடம்பெயர்ந்து சென்றவர்கள். தாம் விட்டுவந்த உடைமைகளையும் வீடுகளையும் பார்க்கச்சென்றபோது, அங்கே அவர்கள் கண்ட காட்சியினால் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

அந்தப்பகுதியில் ஒரு இளம்பெண்ணின் சடலம் அரைகுறையாகப் புதையுண்டிருந்ததை கண்டுவிட்டனர். இதுபற்றி, தமது குடும்ப உறவுகளுக்கும் தெரியப்படுத்தியிருக்கின்றனர்.

மறுநாள் குறித்த சடலத்தை அடையாளம் காண்பதற்காக சென்றவர்களை அங்கிருந்த இராணுவம் பிடித்துக்கொண்டது. அவ்வாறு பிடிக்கப்பட்டவர்களில் ஒருவர் காயங்களுடன் தப்பிவந்துள்ளார். ஏனையோர் எட்டுப் பேரும் படுகொலை செய்யப்பட்டு அப்பகுதியிலுள்ள பொதுமகனொருவரது வீட்டு மலசலகூடக் குழியினுள் வீசப்பட்டிருந்தனர்.



பலத்த காயங்களுடன் தப்பிவந்த பொன்னுத் துரை மகேஸ்வரன் என்பவர் தமது உறவினர்களுக்குத் தகவல் கொடுத்தமையை அடுத்தே இக்கொலைகள் பற்றிய விவரங்கள் வெளியே தெரிய வந்தன. அவர் வழங்கிய தகவலினால், படுகொலை செய்யப்பட்டவர்களது சடலங்கள் மலசலகூட குழியிலிருந்து பின்னர் காவல்துறையினரால் மீட்கப்பட்டன.

முதலில் காணப்பட்ட இளம்பெண்ணின் சடலத்தை நீதிமன்றத்தினாலும் பொலிஸாரினாலும் இறுதி வரையில் கண்டுபிடிக்கமுடியாமல் போய்விட்டது.

யார் அந்த இளம் பெண்? இன்னமும் மர்மம் தொடருகிறது!

2000 ஆம் ஆண்டு டிசம்பரில் கொல்லப்பட்ட எண்மர் பற்றிய விசாரணையை மேற்கொண்ட காவல் துறையினர் சில இராணுவத்தினரை கைது செய்து, சட்டவிரோதக் கைது, சித்திரவதை, படுகொலை மற்றும் குழிகளில் புதைத்தமை உட்பட 19 குற்றச்சாட்டுக்கள் சுமத்தி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

இக்காலப்பகுதியில் சந்திரிக்கா விஜயகுமாரணதுங்க இலங்கை ஜனாதிபதியாக பதவியிலிருந்தார். இந்த வழக்கு முதலில் சாவகச்சேரி நீதிமன்றத்திலும், பின்னர் அநுராதபுரம் நீதிமன்றத்திலும் விசாரிக்கப்பட்டது.

அதன்பின்னர், இவ்வழக்கை விசாரணை செய்ய மூன்று நீதிபதிகள் அடங்கிய குழுவை 2002 நவம்பர் மாதத்தில் சட்டமா அதிபர் நியமித்தார்.

ஜூரிகள் எவரும் இல்லாமல் இவ்வழக்கை விசாரிப்பதற்கு அரசு தீர்மானித்தது.

இவ்வழக்கு பின்னர் கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, மூவரடங்கிய நீதிபதிகள் குழு சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு 2011, ஏப்ரல் 28 இல் சென்று பார்வையிட்டது. கொலைகள் நடைபெற்ற இடம், கொல்லப்பட்டவர்கள் புதைக்கப்பட்டிருந்த இடம், அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்ட நீதிமன்ற வளாகம் ஆகியவற்றை இந்த நீதிபதிகள் மூன்று பேரும் பார்வையிட்டு அதற்கான விவரக் குறிப்புக்களைப் பதிவு செய்தனர்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜயசுந்தர, எச்.என்.பி.பி.வராவெள, சுனில் ராஜபக்ஷ ஆகிய மூன்று நீதிபதிகளும் பிரதி சட்டமா அதிபர் சரத் ஜயமான மற்றும் அதிகாரிகளுமே மிருசுவில் பகுதிக்குச் சென்றிருந்தனர்.

இந்த வழக்கின் ஆரம்ப விசாரணைகளை நடத்திய அப்போதைய சாவகச்சேரி மாவட்ட நீதிவான் அன்னலிங்கம் பிரேம்சங்கர், சந்தேக நபர்கள் மீதான அடையாள அணிவகுப்பை நடத்திய அப்போதைய பதில் நீதவான் சுப்பிரமணியம் கந்தசாமி, இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் தரப்பில் ஆரம்ப விசாரணைகளை நடத்திய பொலிஸ் பொறுப்பதிகாரி சமரக்கோன் பண்டார ஆகியோர் நீதிபதிகள் குழுவினருக்கு சம்பவங்கள் நடைபெற்ற இடங்களை அடையாளம் காட்டினர்.

நீதிபதிகள் குழுவினருடன் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஐந்து இராணுவத்தினரும் மிருசுவில் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

எட்டு தமிழர்களின் கழுத்தை அறுத்து படுகொலை செய்த, இராணுவ அதிகாரி சுனில் ரத்நாயக்க என்பவருக்கு கொழும்பு நீதிமன்றம் 2015 ஜூன் 25 ஆம் திகதியன்று மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த ஏனைய நான்கு இராணுவத்தினரை போதிய ஆதாரமின்மையால் விடுதலை செய்வதாக நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

அந்த மரண தண்டனைத் தீர்ப்பினை மீண்டும் 2017 ஆம் ஆண்டு மே மாதம் உயர் நீதிமன்றம் உறுதிசெய்தது.

2000 ஆம் ஆண்டு நடந்த படுகொலைச்சம்பவத்தின் தொடர்கதை, சாவகச்சேரி – அநுராதபுரம் – கொழும்பு என பயணித்து, இறுதியில் மரணதண்டனை தீர்ப்புடன் முடிவடைந்திருந்தது. இந்தத்தீர்ப்பினை உறுதிசெய்வதற்கே 17 ஆண்டுகள் ஓடிவிட்டன.

இப்போது, குறிப்பிட்ட மரணதண்டனைக்கைதி சுனில் ரத்னாயக்கவிற்கு தற்போதைய ஜனாதிபதி தனது விசேட அதிகாரங்களை பயன்படுத்தி பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளமையால், மிருசுவில் படுகொலைச் சம்பவம் இருபது ஆண்டு காலமாக நீண்ட தொடர்கதையாகி, ஊடகங்களிலும் மனித உரிமை ஆர்வலர்களிடத்திலும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச மன்னிப்பு சபை மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளிடத்திலும் பேசுபொருளாகியிருக்கிறது.

உலகடங்கிலும் மக்கள் கொரோனோ அச்சுறுத்தல் பற்றி பேசிக்கொண்டிருக்கும் இத்தருணத்தில், இலங்கையில் ஒரு மரணதண்டனைக் கைதியின் விடுதலை ஓசையின்றி இடம்பெற்றதாகக் கருத முடியவில்லை.

கொரோனோ அச்சசுறுத்தலை அம்பலப்படுத்திய ஊடகங்களே இந்த வித்தியாசமான பொது மன்னிப்பையும் வெளிஉலகத்திற்கு தெரிவித்துள்ளன.

நீதியில்லா ஊரில் நாதியற்றவள் பிள்ளை பெற்றாளாம் என்று எமது முன்னோர்கள் சொல்வதுண்டு. நாதியற்றவர்களுக்கு நீதி கிடைப்பதில்லை என்பது தான் அதன் பொருள்.

அதுதான் இலங்கையின் நீதித்துறைக்கும் நடந்துள்ளது.

இவ்வேளையில்தான் இலங்கையில் முன்னர் நிகழ்ந்த பல சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன. இச்சம்பவங்களை இலங்கை அரசியலை கருத்தூன்றி கவனிப்பவர்களும் திரும்பிப்பார்க்கலாம்.

(தொடரும்)

# வடக்கு, கிழக்கு ஆளுநர்களே!

# மாற்றுத்திறனாளிகளோடு பேசுங்கள்!!

## ஒரு மாற்றுத்திறனாளியின் உருக்கமான மடல்

**தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பைச் (DATA) சேர்ந்த - முள்ளந்தண்டுவடம் பாதிக் கப்பட்ட - வி.ஜெயகாந்தன் என்பவர் எழுதிய உருக்கமான மடல் இது.**

கொரோனா என்னும் உயிர்க்கொல்லி உலகளாவிய ரீதியில் தாண்டவம் ஆடுகின்றது. அதனைத் தடுப்பதற்கு நாடுகளும் நகரங்களும் பூட்டப்படுகின்றன. அவ்வப்போது ஊரடங்கு தளர்த்தப்படும், அந்த நடைமுறைகளில் மக்களும் முண்டியடித்துக் கொண்டு தமது வாழ்வுக்கான பொருள்களை கொள்வனவு செய்கின்றார்கள்.

சக்கரநாற்காலியில் வாழும் ஒருவனாக, நிலையை சமூகத்தோடு பகிர நினைக்கின்றேன்.

இலங்கைத்தீவின் தமிழர் பிரதேசத்தில் வட மாகாணத்தில் மட்டும் மாற்றுத்திறனாளிகளாக 20,011 பேரும், கிழக்கு மாகாணத்தில் 18,001 பேரும் வாழ்கின்றோம்.




இந்த சமுதாயத்தில் ஏற்கனவே பல்வேறு அவலங்களோடு வாழும் இந்த சமூகக் கூட்டம் கொரோனாவால் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதை இந்த சமூகத்திடம் நான் சொல்ல விரும்புகிறேன்.

ஏற்கனவே பாதிப்பு நிலையில் வாழ்பவர்களை கொரோனா கொல்கின்றது என்று செய்திகளில் படிக்கின்றோம். முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட நிலையில் ஏற்கனவே பல்வேறு உபா தைகளோடு வாழும் நாங்கள் இந்த செய்திகளை கவலையோடு பார்க்கின்றோம்.

அத்தோடு முற்றாக பார்வை இழந்து, கைகளையும் இழந்து, கால்களையும் இழந்து வாழ்கின்ற அத்தனை சமூக கூட்டத்தையும் நாங்கள் நினைத்துப் பார்க்கின்றோம்.

நிவாரண அறிவிப்புக்களிலும், கொடுப்பனவுகளின் அறிவிப்புக்களிலும் எங்களுக்கு சலுகைகள் இருக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

மாற்றுத்திறனாளிகளில் பலர் உழைக்கும் வலுவற்றவர்கள். அவர்களின் நிலை மிகவும் மோசமானதாக இருக்கப் போகின்றது.

அதேவேளை மாற்றுத்திறனாளிகளில் சிலர் உழைத்து வாழ்கிறார்கள். அந்த உழைப்பு முற்றாக நிலைகுலைந்துவிட்டது.

இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு எங்கள் நிலைமைகளை அறிய ஆளுநர், அரச அதிபர்களும் எங்களோடு பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர்கள் எங்களுடைய நிலைமைகளை எங்களிடமே நேரில் கேட்டறிய வேண்டும் என்று விரும்புகின்றோம். முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டோரின் அவலங்களை நான் நன்கு அறிந்திருப்பது போல் பார்வை இழந்தோர், கை இல்லாதவர்கள், கால் களை இழந்தவர்கள், இன்னமும் அந்தந்த பிர தேசத்தின் மாற்றுத்திறனாளி அமைப்புகளைச் சார்ந்தவர்களோடு அரச அதிகாரிகள் பேசுவதன் மூலம் வெளியே சொல்ல முடியாமல் நின்றுழலும் மக்களின் அவலத்தை அறிந்து ஆறுதலைக் கொடுக்க முடியும்.

என்னைப் போன்று பாதிக்கப்பட்டோர், ஊரடங்கு தளர்த்தப்பட்ட நிலையில் இந்த மக்களோடு முண்டியடித்து எமக்கான உணவைப் பெற்றுக் கொள்ளும் வலு எங்களிடம் இல்லை. எமக்கான ஒரு பிரத்தியேகமான நாளை நீங்கள் தளர்த்தி நம்மைப் போன்றோர் உணவு பொருள்களை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இதனை நிவாரண அடிப்படையில் செய்தால் பாதிக்கப்பட்டோரின் குடும்பம் இந்தத் துன்பத்தின் போதும் குறைந் தபட்சம் உணவுஉண்டாவது வாழ முடியும்.

பெரும் அவலத்தை இன்னமும் நாங்கள் எதிர்நோக்கபோகிறோம் என்ற நிலையில்தான் இன்றைய நாள்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் எனது இந்த வேண்டுகோளை ஏற்று அரச நிர் வாகமும் புலம்பெயர்ந்த மக்களும் பாதிக்கப்பட் டோருக்கு நீங்கள் முன்பு செய்கின்ற உதவிகளோடு மேலதிகமான உதவிகளை செய்ய வேண்டும் என்று வேண்டி நிற்கின்றேன்.

பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், அவர்களை பிரிதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகள், அதேபோல் பெண் தலைமைத் துவ குடும்பத்தை பிரிதிநிதித்து வப்படுத்தும் அமைப் புக்கள் ஆகியோரோடு அரச நிர்வாகம் நேரடியாக பேச வேண்டு என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

எங்கள் அவலங்கள் சரியான புரிதலுக் குட்படுத்தப் பட்டு நிவாரணங்கள் கிடைக் கப்பெறுவதன் மூலமே இந்த உலகப்பேரவலத்தில் நாங்கள் தப்பிப் பிழைக்க முடியுமென்ற கருத்தையும் என் சமூகத்தின் முன் நான் உரிமையோடு முன்வைக்கின்றேன்.

நன்றி.

# கடற்படை சிப்பாய் கைது

கொழும்பு, மார்ச் 30

துப்பாக்கிச் சூடு மேற்கொண்டு கடற்படை அதிகாரி ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டில், கற்பிட்டி ஈச்சன்காடு கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படை வீரர் ஒருவர இன்று காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் சரணடைந்த பின்னரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளாரென, கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டி முகத்துவாரம் பகுதியில், நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில், கே.டீ.உஸ். விஜேவீர என்ற கடற்படை அதிகாரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், மேலும் இரண்டு கடற்படை வீரர்கள் காயமடைந்த நிலையில் கற்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக, புத்தளம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒரே குடும்பத்தில் ஐவருக்குத் தொற்று



சிலாபத்தில் வசிக்கும் ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை பரிசோதனைகளில் உறுதியாகியுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

4 மாத குழந்தை உள்ளிட்ட ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

# சிறிய தந்தையால் கர்ப்பிணியான 15 வயதுச்சிறுமி

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் 15 வயது சிறுமியொருவர், சிறிய தந்தையினால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

8 மாத கர்ப்பணியாகிய இந்தச் சிறுமி சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளினால் மீட்கப்பட்டு சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலையடுத்து, அந்தச் சிறுமியின் வீட்டை முற்றுகையிட்ட அதிகாரிகள் சிறுமியை மீட்டுள்ளனர்.

கொழும்பில் இருக்கும் சிறியதந்தையின் வீட்டுக்கு தனது தாயுடன் கடந்த 8 மாதங்களுக்கு முன்னர் சிறுமி சென்ற நிலையில் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, கர்ப்பமடைந்த சிறுமி, தனது வீட்டுக்குள்ளே முடங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டமை பொலிஸாரின் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, சிறிய தந்தையை கைது செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நிவாரணப் பொருள்களை இலவசமாக வழங்குங்கள்

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, மார்ச் 30

மக்களுக்கான நிவாரணப் பொருள்களை முற்றிலும் இலவசமாகவே பெற்றுக்கொடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், கொரோனா கிருமி பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான போராட்டத்தில் முன்நின்று செயற்படும் மருத்துவ சுகாதார சேவையாளர்களுக்கும் பாதுகாப்புப் பிரிவினருக்கும் ஏனைய அனைத்துத் தரப்பினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான போராட்டத்தில் எவ்வித கட்சி பேதமுமின்றி முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம்.

அதேவேளை தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளில் ஏதேனும் குறைபாடுகள் காணப்படுமாயின், அதனைச் சுட்டிக்காட்டித் திருத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பும் எமக்கிருக்கிறது.

அந்தவகையில் இன்றளவில் உணவுத்தட்டுப்பாடு மற்றும் வருமான இழப்பு என்பவற்றின் காரணமாக பெருமளவான மக்கள் பாரிய நெருக்கடிநிலைக்கு முகங்கொடுத்திருக்கின்றனர்.

வறியவர்கள், கூலிவேலை செய்வோர், சுயதொழிலில் ஈடுபடுவோர், முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் உள்ளிட்ட பலர் தற்போதைய சூழ்நிலையில் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுடைய துன்பங்களை நாமனைவரும் புரிந்துகொள்வது அவசியமாகும். நாம் எவ்வித சுயநல எண்ணமுமின்றி, பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுத்து



உதவுவதற்கு முன்வரவேண்டும்.

அவர்களது கைகளில் குறித்தளவு நிதியைப்பெற்றுக்கொடுக்கும் ஒருவேலைத் திட்டத்தை உடனடியாக செயற்படுத்துவது அவசியமாகும். இந்த நெருக்கடி நிலையில் மனிதாபிமான அடிப்படையில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முன்வர வேண்டும்.

எனவே இப்போது மக்களுக்கான நிவாரண உதவி என்ற பெயரில் அதற்காக அவர்களிடமிருந்து பணம் வசூலிக்க வேண்டாம் என்று அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றேன். மக்களுக்கான நிவாரணப் பொருள்களை முற்றிலும் இலவசமாகவே பெற்றுக்கொடுக்க வேண்டும்.

அடுத்ததாக கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கிறதா, இல்லையா என்ற பரிசோதனையை மேற்கொள்ளும் எண்ணிக்கையும் வேகமும் அதிகரிக்கப்பட வேண்டும்.

அந்த வசதிகள் அமெரிக்காவில் இருக்கின்ற காரணத்தினால் அந்நாட்டு சுகாதார அமைச்சரிடமிருந்து இதுகுறித்த ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார். (ஐ)

# ஜூன் மாதத்தில் பொதுத்தேர்தல்!

## வாசுதேவ நம்பிக்கை



கொழும்பு, மார்ச் 30

பொதுத்தேர்தலை ஜூன் மாதம் நடத்த எதிர்பார்த்துள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் ஏப்ரல் மாதம் இடம்பெறவிருந்த பொதுத்தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஜூன் மாதமளவில் பொதுத் தேர்தலை நடத்த எதிர்பார்த்துள்ளோம்.

அதற்குள் கொரோனா வைரஸ் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும்.

ஜூன் மாதம் பொதுத்தேர்தலை நடத்துவதாக இருந்தால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் செல்லுப்படியாகுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஆகவே பொதுத்தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற காரணத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் சட்ட ஆலோசனைக்கு உட்படுத்தப்படும் – என்றார். (ஐ)

# வீடுகளுக்கு ச.தொ.ச. பொருள் விநியோகம்

கொழும்பு, மார்ச் 30

ஊடரங்கு உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளதையடுத்து, அத்தியாவசிய பொருள்களை வீடுகளுக்கு விநியோகிக்கும் செயற்பாட்டை ச.தொ.ச நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இதற்கமைய, அளுத்கமை பகுதியிலுள்ள ச.தொ.ச கிளையில் பணியாற்றும் இளைஞர் யுவதிகள் இணைந்து, இன்று அத்தியாவசிய பொருள்கள் அடங்கிய பொதிகளை மக்களுக்கு விநியோகித்தனர். 500,1,000, 2,000 ரூபாய் பெறுமதியான பொதிகளில் அத்தியாவசிய பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

### கொரோனா தொற்று சந்தேகத்தில்

# 3 மாத குழந்தை உட்பட மூவர் ஐ.டி.எச். வைத்தியசாலையில்

கொழும்பு, மார்ச் 30

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளனதாகச் சந்தேகிக்கப்படும் மூன்று மாத குழந்தை உட்பட மூன்று பேர் சிலாபம் பொது வைத்தியலையில் இருந்து அங்கொடை ஐ.டி.எச். வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இன்றுதிங்கட்கிழமைமட்டும்கொரோனா வைரஸ் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட தொற்றாளர்கள் 3 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும், மொத்த எண்ணிக்கை 120 ஆக அதிகரித்துள்ளது என்றும் சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

இதேவேளை கொரோனா தொற்றுக்குள்ளான சந்தேகத்தில் 117 பேர் நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலையில் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

தற்போதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் 29 பேர் கொழும்பிலும் களுத்துறையில் 18 பேரும் புத்தளத்தில் 15 பேரும் கம்பஹாவில் 10 பேரும் இரத்தினபுரியில் 03 பேரும் குருநாகல், காலி, கேகாலை, மட்டக்களப்பு, பதுளை, யாழ்ப்பாணம் மாத்தறை, கண்டியில் தலா ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikathir

வெளிநாடு




தினம் ஒரு தலைப்பு
சித்திரப்போட்டி

நாளைய (30/03/2020) தலைப்பு
வெளிநாடு

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

## பிரதேசசபை உறுப்பினர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரைக் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று இரவு ஆரச்சிக்கட்டு, சின்னக்கருக்குப்பனே பகுதியில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டிருந்த நிலையில், அந்தப் பகுதியில் கடமையிலிருந்த கடற்படை அதிகாரிகள் குழுவினர், ஊரடங்கை மீறி செயற்பட்ட ஒருவரிடம் நாட்டின் தற்போதைய நிலை குறித்து தெளிவுபடுத்த முற்பட்ட வேளையில், அவர் அமைதியற்று செயற்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய, கடற்படையினர் ஆராச்சிக்கட்டு பொலிஸாருக்கு இது தொடர்பில் அறிவித்ததை அடுத்து, சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

## பேக்கரி உற்பத்திகள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையான சுகாதார விதிமுறைகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் உணவுகளினால் எந்த ஆபத்துமில்லை. விற்பனையாளர்கள் உரிய சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்கிறார்களா என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். - என்றார். (ஐ)

## ஊரடங்கு தொடர்வதால் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் இன்று முற்பகல் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ்.மாவட்டத்தில் கடந்த 10 நாள்களாக தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கின்றது. இடையில் 8 மணித்தியாலங்கள் மட்டுமே ஊரடங்கு தவிர்க்கப்பட்டது. இதனால் அன்றாட வருமானத்திலும், சேமிப்பு இல்லாமலும் வாழ்க்கையை நடத்தி வந்தவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த சூழ்நிலையில் தாமாக முன்வந்து தமது உடல் நலனை பணயம் வைத்து தன்னார்வமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுகளைக் கொண்டு சென்று சேர்ப்பவர்களுக்கு தடைகளையும், கட்டுப்பாடுகளையும் விதிப்பதால் இங்கு ஒரு பட்டினிச் சாவு ஏற்படும் அவல நிலை உருவாவது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கும்.

இவ்வாறு உதவிப் பொருட்களை விநியோகம் செய்த எமது கட்சியின் உறுப்பினர்கள் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இது வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டிய சம்பவமாகும்.

கைது செய்யப்பட்டவர்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஊரடங்கு வேளையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுகளை கொண்டு சென்று சேர்ப்பதற்கான அனுமதியை உரிய முறையில் பெற்றிருந்தனர்.

இருப்பினும் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசால் உதவிப் பொருள்கள் வழங்கப்படாத நிலையிலேயே எங்களால் அவர்களுக்கான உதவிப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

இதனையும் அரச படைகள் தடுப்பது என்பது மனிதத்துவத்திற்கு எதிரான நடவடிக்கையாகும்.

தற்போது நாட்டில் எழுந்துள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தன்னார்வதொண்டு அமைப்புக்களின் சமூகப் பணிகள் ஒரு பாதுகாப்புப் பொறிமுறைக்குள் ஒழுங்குபடுத்தப்பட்டு செயற்படுத்தப்படலாம்.

ஆனால் அந்தச் சமூகப் பணிகள் நிறுத்தப்படக்கூடா. அவ்வாறாக நிறுத்தப்படுமாக இருந்தால் கொரோனா கிருமித் தாக்கத்தால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுமோ என்பதைத் தாண்டி பட்டினிச் சாவு ஏற்படும் - என்றார். (ஐ-07)

## கிளிநொச்சியில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள போது மாவட்டத்துக்கு வெளியே சென்று பொருள்களைக் கொள்வனவு செய்துவரும் மொத்த வியாபாரிகளுக்கு விசேட பாஸ் அனுமதி ஒன்று பொலிஸாரினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனைப் பெற்றுக்கொள்ளவுள்ள மொத்த வியாபாரிகள் தங்களின் விவரங்களுடன் கிராம அலுவலர் உறுதிப்படுத்தல் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் ஊடாக சுகாதார மருத்துவ அதிகாரி உறுதிப்படுத்தலுடன் பிரதேச செயலகம் ஊடாக மாவட்ட செயலகத்திடம் அனுமதி பெற்று பொலிஸாரிடம் அந்த பாஸ் அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் விவசாயிகளுக்கான உரம் உள்ளிட்ட கிருமிநாசினிகளை ஊரடங்கு காலத்தில் நடமாடும் சேவை மூலம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, விவசாயிகளுக்கு கமநல சேவைகள் திணைக்களம் தற்போது விசேட பாஸ் அனுமதி ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இதனை விவசாயிகள் தங்களது கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் பெற்று கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலுடனும் பெற்றுக்கொள்ள முடியும். உத்தியோகத்தர்களின் போக்குவரத்துத் தொடர்பிலும் பேசப்பட்டது எனக் குறிப்பிட்டார்.

மாவட்ட அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், கமநல உதவி ஆணையாளர், சமூகத் திணைக்கள உதவிப் பணிப்பாளர், வர்த்தக சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

## போதிய உதவி இல்லாது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூரில் உள்ள உதவி அமைப்புகள் பல அன்றாடம் அல்லல்படும் குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கி வந்தன. ஆயினும் அவ்வாறான உதவி வழங்கல்களுக்கும் இப்போது அரசினால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமையால் அன்றாடம் உழைத்து உண்ணும் குடும்பங்களின் நிலை பரிதாபகரமாக உள்ளது.

குழந்தைகளுக்கான பால்மா வகைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

யாழ். குடாநாட்டில் அண்மையில் மீளக்குடியமர்ந்த பகுதிகள் உட்படப் பல இடங்களில் மக்கள் நிவாரணப் பொருள்கள் கிடைக்காமல் அல்லல்படுகின்றனர். சில இடங்களில் மீன், மரக்கறி வகைகள் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளபோதும் அரிசி, கோதுமை மா ஆகியவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அச்சுவேலியில் உள்ள மத நிறுவனம் ஒன்றில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 25 பேருக்கு மேற்பட்டோருக்கு நிவாரணம் பொருள்கள் மிகக் குறைந்த அளவிலேயே வழங்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது.

அங்கு சுமார் 10 சிறுவர்கள் வரை உள்ளபோதும் காலை, இரவு உணவாகத் தொடர்ந்து பாண் மட்டுமே வழங்கப்படுவதாகக் கூறுகின்றனர்.

இவை தொடர்பில் அதிகாரிகள் கவனம் எடுத்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் வேண்டாம்!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கு கீழ் ஆட்சியைக் கொண்டுவர வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலை குறித்து, கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தேர்தலை ஒரு வருடத்துக்கு இடைநிறுத்திவிட்டு, ஜனாதிபதியின் கீழ், பொதுச் சபையின் கீழ் ஆட்சி அமைக்க வேண்டும் என்பதே என் யோசனை.

தேசிய ரீதியில் அனைவரையும் இணைத்து ஆட்சி உருவாக்குவது சிறந்த விடயமாகும்.

கட்சி என்பது முற்றிலும் போலியான விடயமாகும். அதனூடாக நம்பிக்கை வைப்பது பாரிய பிழையான விடயமாகும்.

இங்கு கட்சிகளுக்கிடையில் ஜனநாயகம் இல்லை.

இவ்வாறு இருக்க நாடாளுமன்றத்தில் எவ்வாறு ஜனநாயகத்தை எதிர்பார்க்க முடியும். ஆகவே ஜனநாயகம் என்பது போலி விடயம்.

நாம் தற்போது புதிய விடயம் தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

மேலும் புதிய விடயங்கள் தொடர்பில் சிந்திக்காத ஒரு இனத்துக்கு எதிர்காலம் இல்லை.

கட்சிகளை கலைத்து சுயாதீனமாக செயற்பட முன்வர வேண்டும். அனைவருக்கும் தேர்தலில் போட்டி போடும் சுதந்திரம் இருக்க வேண்டும்.

கட்சி இல்லாமல் தனித்து போட்டி போடும் ஜனநாயகத்தை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும்.

தற்போது நாட்டில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு இருப்பதால் பிரதமர், அமைச்சரவை அந்தஸ்து உள்ள அமைச்சர் என எவரும் இல்லை. ஆனால் ஜனாதிபதிக்கு தேவை ஏற்படின் சேவையாளர்களை வைத்து கொள்ள முடியும் - என்றார். (ஐ)

## 122 பேருக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 122 ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

அவர்களில் 11 பேர் முழுமையாகச் சுகமடைந்து வீடு திரும்பியுள்ளனர். ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நாட்டில் கொரோனா தொற்று அறிகுறி உள்ளவர்கள் 114 பேர் வைத்திய சாலைகளில் கண்காணிக்கப்படுகின்றனர். (ஐ)

## 19 மாவட்டங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய பணிகளுக்காக மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளை வினைத்திறனாக பேணும் வகையில் நடைமுறையில் உள்ள முறைமைகளைத் துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு எதிராகச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு உதவும் நடைமுறைகள் மக்களின் நலனுக்காகவே என்பதால் அந்த நடைமுறைகளையும் அறிவுறுத்தல்களையும் பொறுப்புடன் பின்பற்றுமாறு அரசு மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்று பரவலை மையப்படுத்தி, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, புத்தளம், யாழ்ப்பாணம் ஆகிய 6 மாவட்டங்களில் மட்டும் ஊரடங்கு மறு அறிவித்தல் வரை நீடிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மலேசிய மசூதி மத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்படுத்தும் தேசிய நடவடிக்கை மையத்தின் தலைவருமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா இன்று காலையில் 'காலைக்கதிர்' நாளிதழுக்கு இதனைத் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில் பங்குபற்றிய இலங்கையின் மூன்று அணிகள் இங்கு சுதந்திரமாக நடமாடுகின்றமையால் தொற்றுப் பரவும் ஆபத்து இருப்பதாக இன்று காலையில் காலைக்கதிர் செய்தி வெளியிட்டிருந்தமை தெரிந்ததே.

மேற்படி மூன்று குழுக்கள் பற்றிய விவரங்களையும் அந்தக் குழுக்களைச் சேர்ந்தோர் எந்தெந்தப் பகுதிகளில் நடமாடியுள்ளனர் என்பது குறித்த பூர்வாங்கத் தகவல்களையும் இன்றைய காலை இதழ் தாங்கி வந்தது.

மூன்று அல்ல, ஆறுக்குழுக்கள் இலங்கையிலிருந்து இந்த மத நிகழ்வுக்குச் சென்றன என்றும்-

அந்தக் குழுக்களில் இடம்பெற்றிருந்தோர் இதுவரை தமது விவரங்களை அரசுடன் பதிந்து, பகிர்ந்து கொள்ளத் தவறியிருப்பின், உடனடியாகப் பக்கத்தில் இருக்கும் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் - அவர் தெரிவித்தார்.

## சாதாரண தர பரீட்சை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகள் நிறைவடைந்துள்ளன எனப் பரீட்சை ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார்.

கணனி மயப்படுத்துவதற்காக அதிகாரிகளைக் கொண்டு வருவதில் சிரமம் காணப்படுகிறது. எனினும் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு மாணவர்களின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன எனப் பரீட்சை ஆணையாளர் நாயகம் மேலும் கூறினார். (ஐ)

## உயர்தரப் பரீட்சை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, 2019 ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக உயர்தர பரீட்சை ஒத்திவைக்கப்பட்டதாகச் சமூக ஊடகங்களில் ஒரு சில தரப்பினரால் வதந்திகள் பரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொரோனா சந்தேகத்தில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவில் கடமையாற்றும் ஒருவருமே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்திய சாலையில் உள்ள கொரோனா தடுப்பு விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ள அவர்களின் இரத்த மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் பணிப்பாளர் மேலும் கூறினார். (ஐ - 07)

## நால்வர் குணமடைவு ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி மொத்தமாக இது வரை 15 பேர் குணமடைந்து வெளியேறியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உள்ளூராட்சிச் சபைகளின் உதவியை அரசியலாக்கித் தடுத்து நிறுத்தாதீர்!

## அரசிடம் கோருகிறார் வலி.கிழக்குத் தவிசாளர்



யாழ்ப்பாணம், மார்ச் 30

உள்ளூராட்சி மன்றங்களின் உதவியை அரசியலாக்கித் தடுப்பது மனிதாபிமானப் பேரவலத்துடன் விளையாடுவதற்குச் சமன் என

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

மத்திய அரசின் உதவித்திட்டம் இதுவரை மக்களைச் சென்றடையவில்லை.

இந் நிலையில் உள்ளூராட்சி மன்றங்களினால் உதவிகள் வழங்க முன்வரப்படுவதை அரசியலாக்கி தடைகளை ஏற்படுத்துவதை விடுத்து அரசியலற்ற ஒழுங்குபடுத்தலின் கீழ் செயற்படுத்த உரியவர்கள் முன்வரவேண்டும்.

அரசாங்கம் ஊரடங்கு பொறிமுறையினை அறிவித்து இன்றுடன் பத்து நாட்கள் கடந்து விட்டன. இது வரையான காலப்பகுதியில் நாளாந்தம் வருமானத்தில் வாழ்க்கை நடத்தும் குடும்பங்களுக்கு உலருணவுகளோ இழப்பீடுகளோ அரசினால் சென்றடையவில்லை.

இது அரசின் பொறுப்புச் சொல்லும் வகிபாகத்தினை கேள்விக்கு உட்படுத்துகின்றது.

உலக அளவில் கொரோனா வைரஸ் தாக்கத்தினை ஏற்படுத்திய பின்னரே நாட்டினுள் தாக்கத்தினை ஏற்படுத்தியது.

ஆகவே அரசாங்கம் உரிய முன்னெச்சரிக்கையுடன் பாதுகாப்பு ஏற்பாடுகள், நாளாந்தம் வருமானம் பெறுவோரின் வாழ்வாதாரத்திற்கான ஏற்பாடுகளுக்கான பொறிமுறைகளை ஏற்படுத்தியிருக்கவேண்டும்.

அதுவே அனர்த்த முகாமைத்துவம். அரசாங்கம் அறிவித்த கட்டுப்பாட்டு விலைகளிலும் பொருள்களைப்பெறமுடியவில்லை.

முட்டை 10 ரூபா என்றார்கள் கோழிவளர்ப்பாளர்களுக்கு எந்த மானியத்திட்டமும் அறிவிக்கப்படவில்லை.

மீன் டின் 100 ரூபா, பருப்பு 65 ரூபா என்றார்கள் பொருள் உரிய விலையில் சந்தையில் இல்லை.

நாட்டில் பெரும்பாலான மக்கள் அன்றாடத்தொழிலாளர்களாகவுள்ளனர்.

அவர்களது ஜீவனோபாயம் பற்றி பெரிய நிகழ்ச்சிநிரல்கள் போட்டு திட்டங்களைச் செயற்படுத்துவற்கு இதுநேரமல்ல.

பசித்தவனுக்கே உணவளிப்பதற்கான நேரம் இது.

அதற்கான விரைவுப்பொறிமுறையினை அரசு ஏற்படுத்தவேண்டும்.

இந் நிலையில் மாகாண மட்டத்தில் உள்ராட்சி மன்றங்களின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டு மேற்கொள்ளப்பட அவைத்தீர்மானத்தின் வாயிலாக உத்தரவாதமளிக்கப்பட்ட தொகைகளை நிவாரண நடைமுறைப்படுத்தலுக்கு மாகாணமோ மத்தியோ தடையாக இருக்கக் கூடாது.

மக்களைப் பதுகாப்பதற்கான நேரத்தில் அதிகாரிகள் மீது அரசியல் அழுத்தம் பிரயோகிக்கப்படக் கூடாது.

உள்ளூராட்சி மன்றங்கள் உதவினால் அது அரசியலாகப் போய்விடும் என்ற கருத்துக்களை எண்ணங்களை சகலரும் கைவிடவேண்டும். அரசியல் மக்களுக்காக உழைப்பதற்கானது.

மக்களுக்கு சேவை தேவைப்படும்போது அரசியல் தரப்புக்கள் வரப்பிரசாதங்களுடன் இயங்காமலிருங்கள் என்பது விசித்திரமானது.

உள்ராட்சி மன்றங்கள் உரிய அரச நிர்வாகப் பொறிமுறையின் ஊடாக கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகவே உதவ முன்வருகின்றன.

அனர்த்தவேளை ஒன்றில் சட்டப்புத்தகத்தினை மட்டும் கையில் வைத்து வாசித்துப்பணியாற்ற முடியாது.

மத்திய அரசாங்கத்தின் நிதி அதிகாரத்தில் கூட பாராளுமன்றத்தினைக் கூட்டாது எதிர்காலத்தில் நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமா என்ற நியாயபூர்வமான கேள்விகள் இருக்குமிடத்தில் உடனடியாக மக்களின் மனிதாபிமான விடயத்தில் நிதி ஒதுக்கீடு செய்து உதவக்கூடிய உள்ராட்சி மன்றங்களின் தீர்மானங்களுக்கு தடைகள் விதிக்கப்படக் கூடாது – என்றார். (ஐ)

# மட்டக்களப்புக்கு வருவோரை தனிமைப்படுத்த நடவடிக்கை



மட்டக்களப்பு, மார்ச் 30

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்று நோய்த் தடுப்புச் செயற்திட்ட த்தின் கீழ், வெளி மாட்டங்களில் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்துக்குள் வருபவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கையைப் பொலிஸார் இன்று திங்கட்கிழமை மேற்கொண்டனர்.

இதற்கமைய கொழும்பில் இருந்து ஒருவர் மட்டக்களப்பு வாவிக்கரை வீதியிலுள்ள அவரது வீட்டுக்கு வந்துள்ளார். இதனையடுத்து பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய அவர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.கே.ஹெட்டியாராச்சியின ஆலோசனைக்கு அமைய சம்பவதினமான இன்று அந்த நபரின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார், அவரை வீட்டை விட்டு 14 நாட்களுக்கு வெளியேறவேண்டாம் எனத் தெரிவித்து கதவில் கொரோனா தனிமைப்படுத்தல் எச்சரிக்கை அறிவிப்பு கடித்தை ஓட்டிச் சென்றுள்ளனர்.

# அன்றாடம் உழைக்கும் குடும்பங்கள் பாதிப்பு

மன்னார், மார்ச் 30

மன்னாரில் இன்று திங்கட்கிழமை காலை ஊரடங்குச் சட்டம் தளர்த்திக் கொள்ளப்பட்டபோது மக்கள் தமது அத்தியாவசிய பொருள்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

எனினும் மக்களின் வருகை குறைந்த அளவில் காணப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் மீன் பிடி,விவசாயம்,மற்றும் நாளாந்த கூலித் தொழில் ஈடுபட்டு வருபவர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர்.

இந்த நிலையில் தொடர்ச்சியாக ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்ட நிலையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள மீன் பிடி,விவசாயம்,மற்றும் நாளாந்த கூலித் தொழில் ஈடுபட்டு வருபவர்கள் கடுமையாக பாதீக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அவர்கள் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டவில்லை.

மேலும் மக்கள் தமது நகைகளை நகை அடகு பிடிக்கும் நிலையங்களுக்குச் சென்று அடகு வைத்து பணத்தை பெற்று பொருள்களை கொள்வனவு செய்து வருகின்றனர்.







# குடிசை தீப்பற்றி எரிந்ததில் வயல் காவலரும் உயிரிழப்பு

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு, மார்ச் 30

மட்டக்களப்பு, போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பழுகாமத்தில் வயல் காவலர் ஒருவர் தங்கியிருந்த குடிசை எரிந்ததில் அந்த குடிசையில் இருந்தவரும் தீயில் எரிந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்ற நிலையில் பழுகா மத்தினைச் சேர்ந்த ரி.சண்முகம் என்பவரே உயிரிழந்துள்ளார் என களுவாஞ்சிக் குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

வயலுக்கு காவல் இருக்கும் அவரது குடிசை, வயல்களை அண்டிய ஒதுக்குப் புறத்தில் இருந்ததன் காரணமாக இந்தச் சம்பவம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் யாருக்கும் தெரியாத நிலையில் குடிசை முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

சம்பவம் தொடர்பாக களுவாஞ்சிகுடி பொலிஸார் முழுமையான விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர்.

# புத்தளத்தில் 45 பேர் தனிமைப்படுத்தலில்!

கொழும்பு, மார்ச் 30

புத்தளம் பிரதேச செயலகத்திற்குட் பட்ட கடுமையான்குளம் கிராமத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள் ளானவர் என சந்தேகிக்கப்படும் ஒரு வர் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அந்தக் கிராமத்தின் ஒரு பகுதியைச் சுகாதாரப் பிரிவினர் முடக்கி வைத்துள்ளனர்.

அந்தக் கிராமத்தின் ஒரு பகுதியில் வசித்துவந்த 11 குடும்பங்களைச் சேர்ந்த 45 பேர் புத்தளம் சாஹீரா தேசிய கல்லூரியில் அமைக்கப்பட் டுள்ள தனிமைப்படுத்தும் நிலைத்தில் நேற்று தனிமைப்படுத்தலுக்காகத் தங்கவைக்கப்பட்டனர்.

இவர்களைத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை இராணுவம், பொலி ஸார், புத்தளம் நகர சபை மற்றும் சுகா தாரத் திணைக்களம் இணைந்து முன் னெடுத்திருந்தன. (ஐ)



# வைத்திய அதிகாரி அலுவலகங்களில் வேலையற்ற பட்டதாரிகள் இணைப்பு

கொழும்பு, மார்ச் 30

நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் வேலையற்ற பட்டதாரிப்பயிற்சியாளர்களைகொரோனா வைரஸ் தொற்று ஒழிப்பு கடமைகளுக் காக சுகாதார வைத்திய அதிகாரி அலு வலகங்களில் இணைத்துக் கொள்வ தற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பிலான ஏனைய அறி வித்தல்கள் வெகுவிரைவில் வெளியிடப் படும் என அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அரச நிர்வாகம், உள் நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைமற்றும்உள்ளூராட்சிமன்றஅமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்–

தற்போது பிரதேச செயலர் அலுவ லகங்களில் சேவைக்காக சமூகமளித் துள்ள பதிவுசெய்துள்ள பட்டதாரிப் பயிற் சியாளர்களில் பயிற்சி நடவடிக்கைகள் ஆரம்பம் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு மே மாதம் வரை தாமதப்படுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் சுகாதார மற்றும் சுதேசிய வைத்திய சேவை அமைச்சின் கோரிக் கைக்கு அமைய கொரோனா வைரஸ் நோய்த் தொற்று நிலையை கட்டுப் படுத்துவதில் இவர்களின் ஒத்துழைப் புக்களை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குப் பெற்றுக் கொடுக்கக் கூடிய வகையில் இந்த காரியாலயங் களுக்கு தற்காலிகமாக இணைத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# அம்பாறையில் திரண்ட மக்கள்

கொழும்பு, மார்ச் 30

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர் பொதுமக்கள் அதிகளவில் ஒன்று திரண்டு தமக்கான பொருள் களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் இன்று திங்கட்கிழமை காலை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட பின் பொதுமக் கள் தமக்கான பொருள்களைக் கொள்வனவு செய்ய மிகவும் துரித மாகச் செயற்பட்டனர்.

கல்முனை பொது சந்தை மூடப்பட்ட போதிலும் பாதையோரங்களில் மரக் கறி வியாபாரம் களைகட்டியது. மேலும் சில வியாபார நிலையங்கள் சுப்பர் மார்க்கெட்டுகள், பாமசிகள், வங்கிகள், எரிபொருள் நிலையங்கள் வழமை போன்று திறக்கப்பட்டு வியாபாரம் இடம்பெற்றது.

அத்துடன், அம்பாறை பெரிய நீலா வணை, ஒந்தாச்சிமடம், காரைதீவு, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, நிந் தவூர், அட்டப்பளம், சம்மாந்துறை மாவடிப்பள்ளி, சவளக்கடை, மத்திய முகாம் உள்ளிட்ட முக்கிய இடங்களில் பொதுமக்கள் சுகாதார நடைமுறை களைப் பின்பற்றி நின்று பொருள்க ளைக் கொள்வனவு செய்தனர்.

இதேவேளை, தொடர்ந்தும் கல் முனை பிராந்திய சுகாதார சுகாதார சேவைகள் பணிமனையினால் பொது மக்களுக்கு கோரானா தொற்று தொடர்பாக அடிக்கடி விழிப்புணர்வு அறிவிறுத்தல் மேற்கொண்டு வரு கின்றனர். (ஐ)



# அத்தியாவசியப் பொருள்களைக்கூட அதிக விலைக்கு விற்ற வர்த்தகர்கள்

கொழும்பு, மார்ச் 30

ஹற்றன் உட்பட மலையகத்தின் பெருந்தோட்டப் பகுதிகளை அண்டியுள்ள நகரங்களில் பெரும்பாலான வர்த்தகர் கள் அத்தியாவசியப் பொருட்களைக்கூட அதிக விலைக்கு விற்பனை செய்வதால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு சில வர்த்தகர்கள் சாதாரண விலையை விடவும் இரட்டிப்பு விலையில் விற்பனை செய்வதாகவும், நாட்டில் ஏற் பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் கூட மனிதநேயமற்ற விதத்தில் நடந்து கொள்கின்றனர் எனவும் மக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

கண்டி உட்பட 6 மாவட்டங்களைத் தவிர ஏனைய 19 மாவட்டங்களில் பொலிஸ் ஊடரங்குச் சட்டம் இன்று காலை 6 மணிக்கு தளர்த்தப்பட்டது.

மலையகத்திலுள்ள பிரதான நகரங் களில் 6 மணிக்கே மக்கள் கூட்டம் அலை மோதியது. எவ்வளவுதான் அறிவுரை கள் வழங்கப்பட்டாலும் ஒரு சிலர் சமூக இடைவெளியையும், சுகாதார நடை முறைகளையும் பின்பற்றுவதாகத் தெரிய வில்லை.

நுவரெலியா, மாத்தளை, பதுளை, கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட் டங்களிலுள்ள நகரங்களில் இந்நிலை மையைக் காணக்கூடியதாக இருந்தது.

குறிப்பாக ஹற்றன் நகரில் மக்கள் நலன்கருதி, அவர்கள் செயற்படவேண் டிய விதம் தொடர்பாக அடிக்கடி ஒலி பெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டதுடன், பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டி ருந்தது.

நுவரெலியா மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் நுவரெலியா, ஹற்றன், மஸ் கெலியா, பொகவந்தலாவ, கொட்டகலை, தலவாக்கலை, பூண்டுலோயா ஆகிய நகரங்களுக்கு காலை 6 மணி முதலே மக்கள் படையெடுத்து வந்தனர்.

சதொச நிலையங்கள், சுப்பர் மார்க் கெட்டுகள், மொத்த மற்றும் சில்லறைக் கடைகளில் மக்கள் அணிவகுத்து நின்று, நீண்டநேரம் காத்திருந்து அத்தியவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்தனர்.

மரக்கறிச் சந்தையிலும் சனநெருக் கடி காணப்பட்டது. எரிபொருள் நிலையங் களுக்கு முன்னால் அதிக வாகனங்கள் நின்றதால் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. சில வர்த்தகர்கள் மனித நேயத் துடன் நடந்துகொண்டாலும் பெரும் பாலானவர்கள் இலாபம் எடுப்பதிலேயே குறியாக இருந்து வழமையைவிட கூடு தல் விலைக்கு பொருட்களை விற்பனை செய்வதையும், கட்டுப்பாட்டு விலை களை அப்பட்டமாக மீறுவதையும் காண முடிந்தது. (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.03.2020 இல் வெளியிடப்பெற்றது.